# குமரகுரு வேளாண்மைக் கல்லூரி- பொங்கல் விழா 2025

குமரகுரு வேளாண்மைக் கல்லூரியில் 2025 ஜனவரி 10 ஆம் தேதி பொங்கல் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் பறைசாற்றும் விதமாக, மாணவர்கள் பட்டுப்புடவை மற்றும் வேட்டி சட்டை அணிந்து, தமிழர் பண்பாட்டை பிரதிபலித்தனர்.

இந்த பொங்கல் விழா கல்லூரியின் முதல்வர் முனைவர். ரவி குமார் தியோடர்அவர்கள் தலைமையில் துவக்கி வைக்கப்பட்டது. அவருடன் நிர்வாக அதிகாரி திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களும் மற்றும் துணை முதல்வர் முனைவர். எஸ். ஹேமலதாஅவர்களும் கலந்து கொண்டனர். விழாவில் கல்லூரி முதல்வர், எதிர்கால விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் 'இளைஞர் விவசாயிகள் வளர்ச்சி திட்டத்தை' அறிவித்தார். முக்கிய விருந்தினர்களாக சக்தி பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் முனைவர். செந்திலரசுஅவர்களும், சக்தி பாலிடெக்னிக் கல்லூரி இயக்குநர் முனைவர். முத்துசாமி அவர்களும் கலந்து கொண்டனர். குமரகுரு நிறுவனத்தின் உதவி துணைத் தலைவர்கள் திரு. சி. சரவணன் அவர்கள் மற்றும் திரு. என். சூரிய பிரகாஷ் அவர்கள் பொங்கல் பூஜையில் கலந்து சிறப்பித்தனர்.

விழாவின் முதல் நிகழ்வாக பட்டி பொங்கல் வைக்கப்பட்டு, மாடுகளை அலங்கரித்து, அதற்கு சிறப்பு பூஜைகளும் செய்யப்பட்டன.இலக்கிய மன்றம்சார்பில் மாணவர்கள் பொங்கல் சிறப்பு கவிதையை வாசித்தனர். இலக்கியமன்றத்தின் பட்டிமன்றம் துவங்கி, யாழ் இசைக் குழுவின் இசை நிகழ்ச்சியுடன் தொடர்ந்து, பாரம்பரிய கலைகளில் ஒன்றான சிலம்பம் சுழற்றி, மாணவர்கள் பார்வையாளர்களை கவர்ந்தனர்.

நாடகக் குழுவினர் 'தெனாலியின் எழுச்சி' எனும் தலைப்பில் நாடகத்தை அரங்கேற்றி பார்வையாளர்களை மகிழ்வுற்றனர். இதைத் தொடர்ந்து உரியடித்தல், கயிறு இழுத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுகளும், மிஸ்டிக் நடனக்குழுவினரின் பரதநாட்டியம், ஒயிலாட்டம், கும்மியாட்டம் போன்ற பாரம்பரிய நடனங்களும் தமிழர் கலாசார சிறப்பை முன்னிருத்தும் வண்ணம் அமைந்தன.

பண்ணைப் பணியாளர்களுக்கும், கல்லூரி வளாக பராமரிப்பாளர்களுக்கும் இசை நாற்காலி போட்டி நடத்தப்பட்டு, அவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. விருந்தோம்பலை உணர்த்தும் வண்ணம், விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பொது விருந்து வழங்கப்பட்டது.

## Pongal Vizha 2025 at Kumaraguru Institute of Agriculture

The Kumaraguru Institute of Agriculture (KIA) hosted the vibrant Pongal Vizha 2025 on January 10, 2025. The celebrations were a perfect blend of traditional and cultural festivities. Adorned in resplendent sarees and dhotis, students embodied the quintessence of cultural roots.

The inauguration was presided over by Principal Dr. Ravi Kumar Theodore, alongside Executive Officer Thiru. A. Balasubramanian and Vice Principal Dr. S. Hemalatha. The principal made an announcement of the Young Farmers Incubation Programme, a forward-looking initiative aiming to empower future farmers. Distinguished guests, including the Dr.Senthilarsu, Principal andDr. Muthusamy, Director of Sakthi Polytechnic College, attended the event. AVPs of Kumaraguru Institutions, Thiru. C. Saravanan, and Thiru. N. SooriyaPragash also graced the occasion, partaking in the auspicious Pongal pooja.

The event began with the traditional Patti Pongal. Livestock were beautifully decorated, and special pooja was performed for them. Cultural programs kicked off with a vibrant Pattimandram by Team Eloquium, followed by enchanting musical performances by the Cords of Yazh Music Club. The martial arts team displayed their Silambam skills andinteractive games captivated the audience.

A theatrical highlight, “The Rise of Thenali” by the Drama Troupe, enthralled the audience with its engaging storytelling and stellar performances. Traditional competitions like Uriyadi added a dash of excitement, while classical and folk dances, including Bharatanatyam, Oyilattam, Kummi, and other traditional performances by Team Mystique, showcased Tamil Nadu’s artistic legacy. The tug-of-war showcased vigor and team spirit.

A *musical chair competition* was organized for the farm laborers and housekeepers of the Institute, filling the event with joy and gratitude. Prizes were distributed to honor their contributions.The festivities concluded with a communal dinner, instilling an indelible sense of collective harmony.